படைப்பு
சமூகத்தின் இணைப்பு

உளி - 8 | ஓசை - 10 | ஏப்ரல் - 2025 | திங்களிதழ்

www.padaippu.com

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு:
ஆர்.பிரகாஷ்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| மகேஷ் சிபி | 04 |
| ராம் | 04 |
| அபூ சுகந்தன் | 04 |
| நிவேதிகா பொன்னுச்சாமி | 04 |
| சிவசபாபதி பழனிசாமி | 04 |
| ச.ஆனந்தகுமார் | 05 |
| கி.கவியரசன் | 05 |
| வினோத் பரமானந்தன் | 06 |
| தூரிகை | 07 |
| காசாவயல் கண்ணன் | 07 |
| வி.வி. கலைச்செல்வி | 08 |
| கோ. சிவா தமிழ் | 08 |
| கார்த்திக் கல்யாணி | 09 |
| க. புனிதன் | 09 |
| பரமேஸ்வரி சண்முகம் | 10 |
| மணி அமரன் | 10 |
| வ.ரா.தமிழ் நேசன் (மும்பை) | 11 |
| ரகுநாத் வ | 11 |
| தி.கலையரசி | 12 |
| கவிதைச் சிறுவன் | 13 |
| சங்கரி சிவகணேசன் | 13 |
| கா.இலட்சுமணன் | 14 |
| ஆத்மாஜீவ் | 15 |
| அ.ஈடித் ரேனா | 16 |
| மெஹராஜ்பேகம் | 16 |
| வசந்தரா | 17 |
| கோ. பாரதிமோகன் | 17 |
| உமா மஹேஸ்வரி பால்ராஜ் | 18 |
| கீதாவாணி | 19 |
| தனபாலன் தர்ஷன் | 19 |
| ச.ப. சண்முகம் | 20 |
| கருவை ந.ஸ்டாலின் | 20 |
| பாபு | 21 |
| கௌ ஆனந்தபிரபு | 21 |
| தங்கேஸ் | 22 |
| மீ.யூசுப் ஜாகிர் | 22 |
| கலை பாலா | 23 |
| இயலிசம் | 23 |
| நயினார் | 24 |
| மா. காளிதாஸ் | 25 |
| சாஸ்தா | 26 |
| கா வெங்கடேஸ்வரன் | 26 |
| பி.ஹேமா | 26 |
| பா.முத்துரத்தினம் | 27 |
| ஷிபானா அஸீம் | 27 |
| கதிரிளவன் இரவிக்குமார் | 28 |
| நிஷா ராஜேஷ் | 28 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 29 |
| கோவை. நா.கி.பிரசாத் | 29 |
| பிரபுசங்கர் க | 30 |
| அ.சீனிவாசன் | 30 |
| கயல் | 31 |
| சரண்யா சத்தியநாராயணன் | 32 |
| ராணி கஸ்தூரி | 33 |
| சாய் மீரா | 34 |
| ஆ.விஜயலெட்சுமி | 35 |
| சகா | 35 |
| திவ்யா ஈசன் | 36 |
| ப.காளிமுத்து | 37 |
| இதயசகி | 37 |
| செந்தூர் குமார் | 38 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | 39 |



மின்கலன் தீர்ந்துபோன
அலைபேசி
பாடல்கள் இல்லா
இரவு நேரப் பணியை
கட்டாயப்படுத்துகிறது
வேறு வழியின்றி
உன் நினைவுகளுக்கு
அழைப்பு விடுக்கிறேன்

● மகேஷ் சிபி

நானும் பறவைதான்
உன்னில் இறைதேடும்
நேசமென்னும் பறவை.

● ராம்

எத்தனை முறை பெற்றெடுத்தாலும்
நிறைவு பெறாத கருப்பை
வாடகைத் தாய்

● நிவேதிகா பொன்னுச்சாமி

நல்லிசையே தோன்றினாலும்
குழலுக்கு என்னவோ
மரமாய் வாழ்வதில்தான்
மகிழ்ச்சி இருக்கும்.

● அபூ சுகந்தன்

குடிலோடு நடந்து
நாடோடியாய் வாழும்
நத்தை

● சிவசபாபதி பழனிசாமி



## கேள்வியொன்றை என்னிடம் வைத்திருக்கிறேன்

யாரிடம் கேட்டாலும்
என்னிடமே திரும்ப வந்து
விடுகிறது...

பதில் தெரிந்தவர்களிடம்
பயமுமிருக்கிறது...

கேட்கிற வரை சும்மா இருப்பவர்கள்
கேள்வி தொடங்கியவுடன்
அவசர வேலையென
ஓடும் ஆச்சர்யமும் நடக்கிறது...


கடைசியில் கேட்பாரற்று
கேள்வி தனியாகவே
அலைந்து கொண்டிருக்கிறது

தீர்ப்புகள் இல்லாமல்
நிலுவையில் இருக்கிற
வழக்குகள் போல...

● ச.ஆனந்தகுமார்

தன்னை எவ்வளவு அடித்தாலும்
அந்தப் பறவையைத்
தூக்கித்தான் விடுகிறது
இந்தக் காற்று...

● கி.கவியரசன்



## வாழ்தலுக்கு என்ன பெயர்

என் மணற் பரப்பில்
எத்தனை நீரையும்
ஊற்றலாம் நீங்கள்...

நித்தமும் என் உணர்வுகளை
நிர்வாணமாக்க
நடக்கலாம் முயற்சிகள்...

காலாவதியாகிப் போன
என் கனவொன்றிற்க்கு
“ஆசை” என்று நானும்,
பேராசையென்று நீங்களும்
பெயர் சூட்டலாம்.

இருத்தலுக்கும், இறத்தலுக்குமான தூரத்தை
இருக்குமொரு பெயர் கொண்டோ...
இல்லாதவொரு பெயர் கொண்டோ
கடந்து கொண்ருக்கிறேன்...

கடந்து கொண்டேயிருக்கிறேன்

இப்படி
எனக்கு வாய்த்த பெயருக்கும்,
நீங்கள் வைக்கும் பெயருக்குமான
இடைவெளியை நிரப்பிக் கொண்டு
வாழ்தலுக்கு என்ன பெயர்...?

“வாழ்தல்” என்று பெயர்...

● வினோத் பரமானந்தன்



கடந்து வந்த பாதச்சுவடுகளின்
மணற்பரப்பில் ஒட்டிக் கொண்டிருந்தது
என்றோ கசிந்த செங்குருதி

தோல்வியின் தாண்டவத்தில்
கிழிந்து கந்தலான
மனதில் இன்றும் படிந்திருந்தது
சறுக்கல்களின் துயர ஈரம்

பாலையின் கானல் நீராய்
எதிர்நோக்கிய இலட்சியங்கள் எல்லாம்
மணற்பரப்பில் சாய்ந்து புதைந்தது

தேவதைகள் கை குலுக்குவதில்லை
நட்பெனும் பெயரில் தூதனுப்புகிறது
குருதி தொடைத்தெறிந்து
இலட்சியங்கள் நிறைவேற்ற.

● தூரிகை

உமிழ்நீரால் தொண்டையை
நனைத்துக்கொண்டு
தாகத்துக்கு தர்பூசணி விற்கின்றன
பேருந்து நிறுத்தங்களில் பிள்ளைகள்.

● காசாவயல் கண்ணன்



## எத்தனை கடினம்

உன் அன்பைப் பெற நான்
என்னவாக இருக்க வேண்டும்.?
என்னவாக இருக்கக் கூடாது?

உன் அன்பைப் பெற நான்
என்ன செய்ய வேண்டும்.?
எதைச் செய்யக்கூடாது.?

உன் அன்பு இலகுவானதா
கடினமானதா.?
இலகு என்றால்
எப்படி பாதுகாப்பேன்?
கடினம் என்றால்
எப்படி கையாளுவேன்?

உன் அன்பு
என்னை ஜெயிக்க வைக்கும் தானே.?
உன் அன்பு என்னை
மகிழவைக்கும் தானே.?
உன் அன்பு
என்னைப் பிரியாமல்
இருக்கும் தானே.?

சும்மா தொண தொணக்காதே
முதலில் அன்பாக இரு.

● வி.வி. கலைச்செல்வி

உடைந்து போவது என்றால்
ஒரு குழந்தையின்
கையில் இருக்கும்
பலூனாகவே விரும்புகிறேன்.

● கோ. சிவா தமிழ்



ஆழத்தையும், அகலத்தையும்,
தூரத்தையும் கூட
சரியாக கூறிவிடுமாம்
அந்த நீல நிறம்...

துன்பத்தையும், துயரத்தையும்,
சோகத்தையும் கூட
அப்படியே காட்டிவிடுமாம்
அந்த நீலநிறம்...

நீலநிற கடலும், நீலநிற வானமும்
சாட்சிகளாய் காட்சியளிக்க அன்று
நாங்கள் இளமையில் வளர்த்த
காதலைப்பற்றி தனியாகவேறு
நான் கூறத்தான் வேண்டுமா.

● கார்த்திக் கல்யாணி

## பாவனை

ஒரு ஆரஞ்சு பழ சுளையை போல்
சிலந்தி வலையை
பிய்த்து பார்க்கிறது மழலை

குளிர்காலத்தில் என் மேனியில்
ஊற்றிக் கொள்ளும் சுடு நீர்
சின்ன தவளையையும் நனைக்கிறது

மாலை பொழுது தோட்டத்தில்
நான் பறிக்கும் கனகாம்பரம்
பூக்கள் காம்பில் சூரியனின் சிகப்பு

சரிந்து கிடக்கும் சீட்டுக் கட்டில்
கோமாளியின் சிவப்பு தொப்பி நிறத்தில்
கட்டில் கயிற்றில் நசுங்கி கிடக்கும்
மூட்டைப் பூச்சி

நன்னீர் பிரதேசத்தில் கிடக்கும்
நிறைய நத்தைஉடலிகள் போல்
உன் கவிதை வெறும் பாவனை
என சபிக்கிறார் குரு

● க. புனிதன்



பிரிந்து சென்றவர்களின்
நினைவுகள் வதைக்கும் போது
துயரப் பாடலொன்றை
வாட்சப் ஸ்டேட்டஸில்
ஒரு சமிக்ஞையாய் இட்டு
காத்திருக்கிறார்கள்
தேற்ற யாருமற்றவர்கள்

கண்ணீர் உதிர்க்கும்
ஈமோஜி முகங்களை அனுப்பி
பரிதாபம் கொள்கிறார்கள்
அதைக் காணும் சிலர்

யார் யாரெல்லாமோ
பரிதாபம் கொள்கையில்
சலித்துக் கொள்கிறது மனம்

நேசித்தவர்களின் கண்கள்
அதைக் கண்டுவிட்ட நொடியிலிருந்து
காத்திருக்கத் தொடங்கி விடுகிறது மனம்
அழைத்துப் பேசி விட மாட்டார்களா என்று

நேசித்தவர்களிடமிருந்து
மனம் கேட்க நினைப்பதெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்

“உன்னுடன்தான் இருக்கிறேன்
உன்னைவிட்டு எங்கும் செல்லவில்லை”

● மணி அமரன்

அன்பு மனம்
யாசிக்கும் அரற்றும்,
செய்யாத பிழைக்கும் சேர்த்தே
மன்னிப்பைக் கோரும்,
தான்
அழிந்து நிற்கும்,
பிரியத்தின் பிதற்றல் போல,
பிரியத்தின்
நெகிழ்தல் போல
வேறொரு
அற்புத கணம் நிகழ்ந்ததில்லை...
நிகழ்த்தப் பட்டதில்லை. !

● பரமேஸ்வரி சண்முகம்



மீண்டும், மீண்டும்
பால்யமே கனவுகளில் விரிகிறது.

பெரும் காதலோடு
அணைத்துக் கொள்ளத் தோன்றுகிறது,
கனவிலும் விலகிய மாராப்பை
சரிசெய்யும் பால்ய சிநேகிதியை.

பேரிளம் பருவத்திலும்
அத்தனை அழகாய் புன்னகைக்கிறாள்;
மலைத் தேனின் இனிப்பை
அவள் இதழ்களில் ஏந்தி
பெரும் நேசத்தோடு அளவளாவுகிறாள்.

நான் நிகழ் காலத்தை மறந்து
பால்யத்தில் உலாவுகிறேன்.

● வ.ரா.தமிழ் நேசன் (மும்பை)

## ஜென் விரல்

கடற்கடந்த அலையக
நிழல்களை மேற்கின் முகம்
மறைத்துக் கொண்டிருக்கிறது

பாறையின் கல்லுள்ளம்
தொடாமல் அறையுமருவி
வீழ்கிறது

மேகத்தினுள் ஒளிந்த
ஃதினை உள்ளுள் நிறுத்தவில்லை
அண்ட லப்டப்

மினுக்கும் மரத்துளைகளிடையே
நீட்டிய இயற்கையில்
புலனாகிறது ஜென் விரல்

கவிந்த இரவினைக்
கடக்க விரும்பா மின்மினியாய் தத்துவமிருக்க

எழுதியெழுதி அழிக்கப்பழகியிருக்கும்
ஜென்னின் சிந்தனையில்
பிறந்தும் இறந்தும் ஞானம்!

● ரகுநாத் வ



மெய்மைக்கும் மாயைக்கும்
நடுவே நிற்கிறாய்
வழிவிடு
நான் என்னை அடைய
உன்னை அடைய வேண்டும்.
*

நான்
எத்தகைய அடிமை பார்த்தாயா?
காதல் சந்தையில்
என்னை
விற்பதும் நீதான்
வாங்குவதும் நீதான்
*

காதல்
பாவத்திற்கும் உரைகல்
புண்ணியத்திற்கும் உரைகல்
இரண்டையும் உய்த்துணர
நீதான் வேண்டும்
*

காதலிலிருந்து வெளியேற
விளிம்பைத் தேடுகிறேன்
ஆனால்
நுழைந்த பிறகுதான் தெரிகிறது
காதலுக்கு
புறமும் அகம் தானென்று

● தி.கலையரசி



கனவில் நீ நெய்த
புரிந்துணர்வு பொய்யாடை
நீ நிஜத்தில் நிர்வாணமாக்கிய
என் நிழலுக்கு கூட உதவாது...

என் உண்மை காடு
உன் போலித் தீக்குச்சிகளால்
எரிவதைத்தான் பொறுத்துக் கொள்ள
முடியவில்லை தவிர
உன் சமாதான பம்மாத்துக்களை
என் சாம்பல் எண்ணங்கள்
எப்போதுமே ஏற்காது...

என் மார்பின் நடுவில் விழுந்த
உன் கூரான வெட்டுச் சொற்கள்
ஒருபோதும்
உன் மயில் இறகு மருத்துவத்தை
தடுக்காத காரணம்...

பதுமை
பழைய நிலைக்கு
திரும்பி விட்டாள் என்பதல்ல
தீ படரப் போகும் சடலனத்தின் மீது
நீ படர்ந்தால் என்ன
ஈ மொய்த்தாலென்ன
ஆன்மாவிற்கு தெரியவா போகிறது

● கவிதைச் சிறுவன்

நேற்றைய சுவடுகளும் நாளைய தொலைவுகளும்
வெறும் கதைகளுக்குள் முடங்கிப் போய்விடுவதில்லை,
நிஜங்கள் நிறையவே உண்டு...
அதைத் தேடியலைவதில்தான்
தொலைந்து போகிறது மனம்...

எல்லாம் கிடைத்துவிட்டால் அல்லது
எல்லாம் தெரிந்துவிட்டால் எமக்கான தேடல்கள்
முற்றுப்பெற்றுவிடும்...

அடுத்த நொடிக்கான எதிர்பார்ப்பின் பொருட்டு
முயன்று கொண்டிருக்கின்றன
முற்றுப்புள்ளிகள் முடிவலியாய்...

முடிவிலிகள் ஒவ்வொன்றும்
புதிய அனுபவங்களாக நகர்த்திச் செல்கிறது
இந்த வாழ்வை...

ஒரு புல்லாங்குழல் போன்ற வாழ்வில்
ஒவ்வொரு துளைக்குள்ளும் காற்றாய் விழுந்து
காணமாய் எழும்பும்
நாமெல்லாம் மேதைகள்தான்
இல்லை... மாமேதைகளே...

● சங்கரி சிவகணேசன்



## விலகி நிற்கும் தனிமை

விடை பெற்றுக் கொண்டனர்
வந்தவர்கள்

இருப்பது நாற்காலிகள், மேசைகள்
மற்றும் சாயம் பூசிய சுவர்கள் மட்டுமே

குலுங்கிக்கொண்டிருக்கின்றன
சிரிப்பலைகளில் அறைகளும் வீடு முழுதும்

நடந்த நடைகள் கண்ணில்
ஒற்றிக்கொள்ளும்பொழுது
தனிமை விலகி நின்றது

போட்ட கோலங்கள் போட்டப்படி வாசலில்
நடனமாடிக்கொண்டிருந்தன
வண்ணங்களில்

அது நீடிக்கவில்லை

இரண்டு மூன்று நாள்களில்
சிங்கப்பூருக்கும் கோலலும்பூருக்கும்
'பாய் பாய்' காட்டிவிட்டு பயணமாகிவிட்டனர்

உறவுகள் இரவு பகல் போலத்தான்
போய் போய் வரும்
நிலையில்லா காலங்கள்தான்

மீண்டும் கூண்டில் அடைப்பட்ட
கிளியென ஆவேனோ தவிக்கிறது மனம்

கதவைத் திறந்துவிட்ட தீபாவளி மூடிவிட்டது

விழிகள் ஏங்கியபடி அடுத்தாண்டு வரை
அதே தடத்தை பார்த்துக்கொண்டு

கட்டியணைத்த பேரன் பேத்தி
அன்பு இறுகி நிற்கிறது

முத்த மழையில் நனைந்தபடி
யாருமில்லை என்ற பிதற்றல் இனி இல்லை
என்றவளுக்கு கொஞ்சகாலம்தான்

வானத்திற்கு விடிகிற சக்தி இருக்கவேகூடாது
ஒவ்வொரு முறையும் இப்படித்தான்
யோசிக்கவைக்கிறது அவளை

மூடியே கிடக்கிறது சன்னல் திரை

பறக்க வேண்டிய பறவைகள் சிறகை
விரித்துவிட்டன பறப்பதற்கு

அப்பொழுது விழ வேண்டிய
ஆனந்த கண்ணீர்த்துளி
இதோ இப்பொழுது விழுந்துகொண்டிருக்கிறது
யாருமில்லா ரகசியமாய்

● கா.இலட்சுமணன்



கடவுளை பார்த்தேன்
கையெடுத்துக் கும்பிடவில்லை
அவருக்குப்பின் நின்றிருந்தது
சாத்தானும்.

வரம் கேட்க மாட்டாயா
என்றார் கடவுள்.

மௌனமாய் நின்றிருந்தேன்.

அலைபாயும் கேள்விகளில்
ஒன்றைக் கேள் என்றார்.

உங்களின் நிழல் அதுவா
அல்லது
சாத்தானின் நிழலா
நீங்கள் என்றேன்.

இரகசியம் புரிந்து கொண்டாய்
வாழ்க்கை ஒரு விளையாட்டு அல்ல
வேட்டை.
அம்பெய்தவனிடமே திரும்பும்
அம்பிலிருந்து
தப்பிப்பதே வாழ்க்கை.

ஒளியும் இருளும்
இன்பமும் துயரும்
கடவுளும் சாத்தானும்
ஒன்றின் நிழல் ஒன்று.

வாழ்நில வனத்தில் எப்பொழுதும்
தொடர்ந்தபடிதான் இருக்கும் வேட்டை.

சிரித்தார் கடவுள்
சாத்தானின் குரலில்.

எனில் நீங்கள் இருவரும்
மனிதர்களைத்தான் வேட்டையாடுகிறீர்களா?

சட்டென்று மறைந்தார் கடவுள்
சாத்தானின் நிழல் தொடர.

● ஆத்மாஜீவ்

கல் சிலேட்டோ
காகிதமோ
கான்கிரீட் சுவரோ
கணக்கில்லை அவளுக்கு

காணும் இடமெல்லாம்
விதவிதமாய் வீடுகளையே
வரைந்து கொண்டிருக்கிறாள் மகள்

கதவு ஜன்னல்
வாசலில் நிற்கும்
வண்டி வரைக்கும்
வரைந்து விடுகிறாள்.
பூச்செடி நாய்க்குட்டி
எதையும் விட்டு
வைப்பதில்லை

குச்சிக் கால்களுடன்
அம்மா அப்பா
வாலு அண்ணா
குட்டிப் பாப்பா
எல்லாம் வரைந்தாலும்

எந்த வீட்டிலும்
வரையப்படுவதில்லை
தாத்தா பாட்டி

● அ.ஈடித் ரேனா



தன்னை சிக்க வைக்கும்
ஒரு தூண்டில் புழுவும்

விடுதலைக்கான
ஒரு சிறைச் சாவியும்

மறைமுகமாக
கிடைத்து விடுகிறது
ஏதோ ஒரு கவிதையில்
ஏதோ ஒரு வாசகனுக்கு

● மெஹராஜ்பேகம்



ஒவ்வொரு சண்டைக்குப் பின்பும்
கண்கள் அழகாக
சந்தித்து கொள்கிறது

ஒவ்வொரு சண்டைக்குப் பின்பும்
சுவையூறும் முத்தம் எளிதாகிறது

ஒவ்வொரு சண்டைக்குப் பின்பும்
இறுக்கி தழுவிக்கொள்ளுதல்
பேரூற்றாகிறது

ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும்
ஒரு பெருங்காதல்
மென்மையாய் மலர்கிறது

அன்பே வா
தினம் சண்டையிட்டு
மிகைக்காதல் திளைப்போம்...

● வசந்தரா

## இயந்திர இதயம்

எதிரெதிர்த் திசைகளில்
வாகனங்கள் விரைகிற
நெடுஞ்சாலையில்
உதிர்ந்திருக்கிற சருகினை நகர்த்தி
உலர்ந்த வாழ்வின்
ஆயுளைக் கூட்டுற காற்று
கடவுளா சாத்தானா?

● கோ. பாரதிமோகன்



ஒருவழியாக.
ஆமாம் ஒருவழியாக வயதாவதை
மனதை நம்ப வைக்க முயற்சி
செய்து கொண்டிருக்கிறேன்

அடிக்கடி அம்மாவிடம் சண்டை போடுவதை
நிறுத்தப் போகிறேன்.

அவளுக்கு என்னைவிட வயது அதிகம் தானே
பாவம் அவள் நான் வந்து விட்டேனென்றால்
நானருந்தும் குளம்பியிலிருந்து
பலகார பட்சணம் தொடுகறி
எதையும் குறையற்று
மனம் நிரப்பி ஊரனுப்புவாள்.

அவளைப்போல்
கொண்டாட யாருண்டு எனக்கு.

என் வலியை என் இயலாமையை
என் தோல்விகளை என் இழப்புகளை
வேறு போக்கிடம் இல்லாததுபோல் எண்ணி
அவளிடம் காட்டுவது எத்தனை பிழை
எத்தனை காலமாக
நான் இந்தத் தவறுகளை புரிகிறேன்

ஏதாவது அவள் என்னைப் பற்றி
புகாரிட்டுக்கொள்கையில்
சரியென்று ஏற்கப்பழகாத மனம்
என்ன புத்தி எனது

இந்த உடல் இந்த உயிர்
அவளது பிச்சை அவளது கருணை
அவளது சகிப்புத்தன்மை அவளது எச்சில்
அவளது குருதி

நான் அவளை கொண்டாடாத
நாட்களுக்கும் சேர்த்து
இனிவரும் நாட்களில்
சமாதானமாய் போய்விடவேண்டும்

எழுத வராது இருந்தால்
உண்மையில் அடுப்படி கறைகளோடு
கோயில் வாசத்தோடு
மாடத்தை சுத்தம் செய்து

இந்தப்பொழுது வடாம் பிழிந்தெடுத்து
கொடியுலரும் துணிகளோடு
அவளது வாழ்வைப்போல்
நின்றிருப்பேன்.

சின்ன சண்டை
அம்மாவிடம் பேசி வாரமாயிற்று...
பேசாமல் இந்தக்கவிதையை
அவளுக்கு அனுப்பிவிட்டு
இரண்டாவது காப்பிக்குள் போய்விடலாம்...

எனக்குத்தெரியும்
பாத்திரங்களை கவிழ்க்குமுன்
அலைபேசிவிடுவாள்...

● உமா மஹேஸ்வரி பால்ராஜ்



உடைந்துவிழும் ஒவ்வொரு
பொழுதிலும் உன் தோள்களில்
தான் முகம் புதைத்துக்கொள்ள ஓடி
வருவேன் அப்போது
இப்போதெல்லாம்
நேரம் வாய்ப்பதில்லை.

அத்தனை வலிமை
மிகுந்தவையல்ல தான் அவை
ஆனால் வலிமிகுந்த என்னை
ஊடுருவி வலியாற்றும் கூட்டுக்குள்
உயிர் ஒளி ஏற்றும்.

என்னை நாளெல்லாம்
அரித்துத் தின்னும் வேலைப்பளுவில்
உன் விரல் பிடித்து இறுதியாய்
காதலுறைத்த நாள் தான் எப்போது.?!
நினைவுகளில் மீளவில்லை.

நிலவு முகமென உன்னைப் பார்த்து
வியந்த நெஞ்சத்தின் நிழல் கூட
தொலைத்துவிட்டேன்
என் பிரியத்தின் பரிணாமம் சிதைகிறது
சினம் என்ற நஞ்சருந்தி.

உதிர்தே கிடந்தாலும் துளிர்ப்பது எக்காலம்...?
நாளெல்லாம் உழைத்தே கிடந்தாலும்
பிழைப்பது எக்காலம்...?!
வா இயந்திரம் களைந்து இதயத்தை
பொருத்திக் கொள்வோம் இனியாவது.

● கீதாவாணி

குளிரோ
கோடையோ...
இமைப் போர்வை
போர்த்தாமல்
உறங்குவதில்லை விழிகள்...!

● தனபாலன் தர்ஷன்



வளர்ந்தபோதும்
தேய்ந்தபோதும்
முழுதானபோதும்
சிக்கியதேயில்லை
மீனவன்
விரித்த வலையில்
நிலவு.!

● ச.ப. சண்முகம்

அன்று முதல்
எத்தனை தடவை வந்துவிட்டார் அவர்
அவரால் அவரைத் தாண்டி
வர முடியவேயில்லை இன்றும்
அங்கேயே நின்று கொண்டார்
என்ன சொன்னார்?
அதைத்தான் தேடுகிறேன்
தட்டுப்படவேயில்லை அரூபத்திற்கு
குரலும் உருவமும்தான் அத்துணை
ஒப்புமை
கச்சிதமாக அவர்தானென யூகிக்க முடிந்தது
என்னதான் வேண்டுமென கேட்டேன்
தயங்கியே சொன்னார்
முடிப்பதற்குள் விடிந்துவிடுகிறது
இப்பொழுது பார்
அடுத்தநாள்
தூங்க வேண்டும் மீண்டும்
கனவே வந்துத் தொலையாதே!
காரணம் சொல்ல
கஷ்டமாகயிருக்கிறது
அவரிடமும் – அவர்களிடமும்.

● கருவை ந.ஸ்டாலின்



## குலசாமியின் கதை

ராஜாக்களும் காக்கைகளும்
சலித்த இரவொன்றில்
ஐந்தாறு தலைமுறைகளுக்கு முன்
துர்மரணமடைந்த ஒருத்தி
குலசாமியான கதையை
நடுக்குற்ற குரலில் அம்மா சொன்னாள்.
சூதும் மாதுமாக
களிநடனம் புரிந்து
கறிசோறும் சாராயமுமாக
பெருவாழ்வு வாழ்ந்தவனை
திருத்தமுடியாமல் ஏதோவொரு
வசைசொல்லில் அடிபட்டு
கிணற்றில் விழுந்தவளின் கதை அது.
வம்சத்து ஆண்களின் அழிச்சாட்டியம்
தாளாது போகையில்
பேச்சியம்மா கோயிலின்
கயிரெடுத்துக் கட்ட மட்டுப்படுமென்றாள்.
ஒருசமயம் எங்கோ குடித்துக்கிடந்து
சட்டையெங்கும் சேறும்சகதியுமாய்
திரும்பிவந்த அப்பாவை குளிப்பாட்டிவிட்டவள்
மறுநாள் விடியலில் பேச்சியின் சன்னதம்
வந்து விளாசியெடுத்தாள்.
'சரி தாயி...சரி தாயெ'ன
வாய்பொத்தி குனிந்துநிற்கும்
அப்பாவைக் கண்டது அன்றுதான்.
ஆங்காரம் தணிந்து மயக்கமுற்றவளுக்கு
தண்ணீர் புகட்டுகையில் யாருமறியாமல்
அம்மா என்னிடம் புன்னகைத்தாள்.

● கௌ ஆனந்தபிரபு

புளியம் பழத்தின்
ஓடு பழுத்து
உடைத்துவிடுகிறது
பழைய
இனிய நினைவுகளை
உச்சும் கொட்டும் ருசி
எப்போதும் இந்த
பால்யத்திற்கு

● பாபு



## பயணி

காலம் ஒரு பழுதான ரயில் பெட்டி
அது அவ்விடத்திலேயே தான்
நின்று கொண்டிருக்கிறது
தண்டவாளங்கள் தான்
விரைந்து சென்று கொண்டிருக்கின்றன

உள்ளே அமர்ந்திருப்பவனுக்கு
தானே பயணிப்பதாய் நினைப்பு

பயணத்தை தீர்மானிக்க
முடியாதவனுக்கும்
பயணியென்று பெயர்
உள்ளேயும் வெளியேயும்
ஒரே நேரத்தில் ஒரு பயணி

நாம் நிறுத்தங்களை
நோக்கிப் போகிறோம்
இல்லை
அவைகள் தான்
நம்மை நோக்கி வருகின்றன

நாம் நிறுத்தங்களில்
இறங்கிப் போகிறோம்
தவறு
நாம் இறக்கி விடப் படுகிறோம்

பயணம்
முடிவுறாமல் தொடர்கிறது

● தங்கேஸ்

எதிர்பாராத நேரத்தில்
மழைக்காக திரண்டு
வரும் கருமேகங்களை
போலவே.,
என்றேனும் இரவில்
உன் வாசம் நாசி
நுழையும் நேரத்தில்
மனதில் திரண்டு வருகிறது
ஒரேயொரு நிராயுதபாணியை
எதிர்க்கும் ஆயிரம் போர்வீரர்களாக
உன் நினைவுகள்...!!!

● மீ.யூசுப் ஜாகிர்



யாரோ அழைத்தது
போல் இருந்த ஒன்றில்
உன் குரலை
தொலைத்துவிட்டேன்

ரோஜாவிதழுள்
உன் வாசனையயை
உட்புகுத்தி விட்டேன்

எழுதத் தெரியாத
கவிதையொன்றை
தேடிக்கொண்டிருந்தேன்

உள்ளூரும் உணர்வுக்கு
நிச்சயத்திருந்தேன்
அந்நிறுத்தல் குறியீட்டை

உன்னில் வசப்படுத்தியிருந்தேன்
எதிர்பார்ப்பின் மொத்தத்தையும்

செல்லவியலா தூரமதனை
துரத்தித் தூர எறிந்தேன்

சென்றவரையில்
போதாத அட்சயத்தில்
உள் நுழைத்தேன்

திரிந்து போனதொரு
முத்தத்தை பரிசளித்தேன்

இதெல்லாம் நான் காதலென
நம்பப்பட்ட கானல்!...

● கலை பாலா

சாப்பிட்டு தூக்கி எறிந்த
மாங்கொட்டைகள் முளைக்கும்
நிலம் விட்டுத்தான்
கொட்டைகள் இல்லா
மாம்பழம் கிடைக்கும்
நகரம் தேடி வந்தான்
இன்று குழந்தை வரம் கேட்டு
மருத்துவமனை போகிறவன்

● இயலிசம்



## காதல்

புரிதலுக்கு
நேர்த்தியாக செய்யப்படும்
ஒப்பனை.

தன்மானத்துக்கு
கொடுக்கும் முழுமையான
விடுதலை.

விட்டுக் கொடுத்தலுக்கு
விளக்கு பிடிக்கும்
வெட்கம்.

அடிமைத்தனத்திற்கு
தினமும் எடுக்கும்
பயிற்சி.

சுயமரியாதைக்கு
குழி தோண்டும்
கல்லறை.

தன்னம்பிக்கையை
சாகடிக்கும்
நோய்.

பலத்தை
பலவீனமாக்கும்
அருகாமை.

இத்தனை இருந்தும்
இந்தக் காதல்
அழகாக தெரிகிறதென்றால்
அது
அன்பு காட்டும் வெளிச்சம்.

● நயினார்

என்னைப் போலவே காயம்பட்ட
ஒருவனை நேற்று பார்த்தேன்.

காயம் எப்படி ஏற்பட்டதென
யாரும் கேட்டு விடுவார்களோ
என்ற பதட்டத்துடன் இருந்தான்.

ஒரு சிறிய பொய்யை
மறைக்க முயலும் ஒரு பெரிய பொய்
காயமென உணர்ந்த போதும்
தழும்புகளை மறைக்க முயற்சித்தான்.

காயத்திற்கான களிம்புகள்
கைவசம் வைத்திருக்கும்
அவன் கண்கள்
புதியதைத் தேடுகின்றன.

இதுவொரு சிறிய வெட்டுக்காயம் தான்
நூலாம்படை போதும்
கண்டுகொள்ளாமல் விட்டுவிடு
ஆறிவிடும் என்றால் கேட்கிறானா?

அவரவர் குருதி
அவரவர் வலி
அவரவர் தழும்பை
அவரவரே உணர முடியும்
என்றவனின் காலம்
கண்ணாடியாக உடைந்து
நொறுங்குகிறது.

சிறு கீறல் கூடப் படாமல்
அவ்வளவு கவனமாக
அவ்வளவு நேர்த்தியாக அள்ளி
ஆழக் குழியில் புதைக்கிறான்.

அங்கே யாரோ
வானம் தோண்டுகிறார்கள்
மண்வெட்டியில் மின்னுகிறது
ஒரு புதிய பிம்பமும்
ஒரு புதிய காயமும்.

● மா. காளிதாஸ்





## மிச்சம்

அங்காடியில்
அரைமணி நேரம்
பேரம் பேசி
மொத்தமாய்
வாங்கிய காய்கறியால்
ஐம்பது ரூபாய்
மிச்சமென்று
மனைவி பெருமையுற்றபோது
முன்னிரவு
நண்பர்களுடன்
குடித்துக் கரைத்த
ஐநூறு ரூபாய்
ஞாபகம் வந்தது.

● சாஸ்தா

இன்று மழை வந்தால்
தேவலாம் என்கிறாள் ஒருத்தி
வெயில் தாளாமல்
குவளை மோருக்காக
கடை கடையாய் ஏறி
இறங்கிக்கொண்டிருக்கிறான்
ஒருவன்.
காலையில் அலுவலகம்
கிளம்ப வாகனத்தில் ஏறி அமர்ந்தவுடன்
மகளனுப்பிய பறக்கும் முத்தத்தை
மறுபடியும் நினைவுகூற...

நுழையும்போதே
குடையை மறந்து தொலைத்ததை
குறையாய் கொட்டிக்கொண்டிருக்கிறாள்
எதிர் மேசைக்காரி
வெளியில் நல்லமழையாம்.

நல்லவேளை...
நான் குடைபிடிப்பதேயில்லை
அவள் உறங்கி எழும்போதெல்லாம்
ஊதி பறக்கவிடும் முத்தங்களுக்காகவே.

● கா வெங்கடேஸ்வரன்

மகளுக்குக் கோடை விடுமுறை
தொடங்குகிறது
பிரிவின் ஒத்திகை

● பி.ஹேமா



முதலில்
கடவுள்தான் கைவிடுகிறார்
பின்தான்
மற்றவர்கள் கைவிடுகிறார்கள்

முதலில்
கடவுள்தான் அணைத்துக்கொள்கிறார்
அதன் பின்தான்
மற்றவர்களும் அணைத்துக்கொள்கிறார்கள்
ஒரு மாயஜாலம்போல்

இருந்தும்
இரண்டாம் தருணம்
எப்போதாவதுதான் நிகழ்கிறது
வாழ்வில்...

அதுவும்
இறுதியாய்
எப்போது நிகழ்ந்ததென்று
நினைவிலில்லை...

● ஷிபானா அஸீம்

பேனாக்களின் முனையால்
துகிலுரிக்கப்படுகிறது
என் வார்த்தைகள்
எந்தவித ஒளிவுமறைவுமின்றி...
வெள்ளைத் தாள்களில்
மையுடன் சேர்ந்தே
கண்ணீரும் கரைகிறது...
கசக்கி எறிந்த
காகிதங்கள் சொல்கின்றன
என் காதலை
ஈரத்துடன்.
மனம் கேட்காமல்
பத்திரப்படுத்திக் கொள்கிறேன்
உன் பெயரின்
முதல் எழுத்தை மட்டும்...

● பா.முத்துரத்தினம்



அவர் அழைத்தது என்னைத்தான்
அவர் கூவி அழைத்தது
என் பெயரைத்தான்
பசியடங்க கிடைக்கும் என்று
நம்பிச் சென்றதில்
கூரையின் ஓரத்தில்
இந்த காக்கைக்கு
அந்த நபர் வைத்ததோ
சம்பிரதாயத்துக்கான
சொற்ப பருக்கைகள் தான்...

உள்ளே நடந்து கொண்டிருக்கிறது
அழையா விருந்தாளிகளுக்கும்
அறுசுவை விருந்து...

● கதிரிளவன் இரவிக்குமார்

வெற்று வனமான
என் மனமெங்கும்
நீ விதைத்து விட்டுச் சென்று
மெய் நேச விதைகளின்று
துளிராகித் தளிராகி
புன்னகை பூக்களை
பிரசவிக்க
அம் மலர் மழலைகளை
என்னுயிரில் சேகரித்து
பூச்செண்டாக்கி
பரிசளிக்கிறேன்
உயிர் மீட்ட உன்னிடமே
எனததீதா...

● நிஷா ராஜேஷ்



உன் கிழக்காக இருந்தவள்
கருமையை பூசி
மறைகிறேன் மேற்கில்

இரு திசைகளுக்கும்
நடுவிலிருக்கும் தூரம்
குறைவு என்றாலும்
அன்பின் வழியை
தொலைத்தவள் இவள்

அதீத மின்விளக்குகளின்
நேசத்தை விரும்பி கண் கெட்டு
இருட்டை விரும்பி
ஏற்றுக் கொண்டவள் இவள்

காயப்படுத்தியவளுக்கு
இதயங்களை பறக்கவிடும் உன்னிடம்
மரிக்கொழுந்தின் மணத்தை மறைத்து
அரளிப்பூக்களின் வாசத்தை
காட்டுபவள் இவள்

என் பக்கங்களை
வாசித்துக் கொண்டிருக்கும் உன்னிடம்
மேகங்களற்ற வானத்தின் தனிமையை
கூறப் போவதில்லை.

● செ.ரா.கிருஷ்ணகுமாரி

விற்காத பழம்
கருத்துப்போனது
வியாபாரியின் முகம்!

● கோவை. நா.கி.பிரசாத்



எப்போதும் பரபரப்பான
மனநிலையிலேயே
வைத்துக் கொண்டிருக்கிறது வாழ்க்கை
இன்னொருவர் இயல்புகளைப் பார்த்து
பொறாமைப்படுவதும்
இயலாமைகளை எண்ணி
வெதும்பி புலம்புவதும்
வாடிக்கையாகி விட
நேரத்தைக் கொன்று
தனிமை முகமூடியோடு
வெகு வேகமாக
ஓடிக்கொண்டிருக்கிறேன்
களைப்பும் மலைப்பும் உழைப்பும்
அணிகலன்களாக தொடர
இதுவும் போகும்
இன்னமும் கடந்து போகுமென்ற
சூட்சமத்தில் சிறு புள்ளியாகிறது
உயிரென்னும் மாயை...

● பிரபுசங்கர் க

## மவுனத்தின் விதி

புரிந்ததா என
கேட்டீர்கள்.
விருப்பமா என
நீங்கள் கேட்காத மௌனத்தில்
எனக்கு எல்லாம்
புரிந்துவிட்டது.

● அ.சீனிவாசன்



## மீண்டும் மீண்டுமாய்

விலக விரும்பா நிலையிலும்
நெருங்க வழியறியாது
உரைக்க இயலா சூழலிலும்
உணர்ந்த ஓர் நேசம்...

தொலை தூரம் இருந்தாலும்
தொலைந்து போகாது
காணக் கிடைக்கா பொழுதுகளில்
கருத்தை நிறைத்து
நித்திரை விழுங்கும் கனவாக
நிஜத்தை நிறைக்கும் நினைவாக
நீங்காது நீடித்த நேசம்...

வழியின்றி ஆழ்மனதில்
புதையுண்ட போதும்...
மீண்டும் உலா வரும்
அன்று முணுமுணுத்த
மனம் கவர்ந்த பாடல்களும்
எங்கிருந்தோ நாசி தீண்டும்
நின் பிரத்யேக
நறுமண திரவியத்தின் வாசமும்...

இப்படி
ஏதேனுமொன்று
எண்ணங்களை கிளறுவதை
தடுக்க முடிவதில்லை...
தவிர்க்க தோன்றவில்லை...

● கயல்



சில நிமிடம்
மொட்டை மாடியில்
நானும் அந்த காக்கையும்

ஓரிரு முறை கரைந்துவிட்டு
அது என்னை பார்த்தது...
மௌனம் களையாமல்
நானும் அதனை பார்த்தேன்...

அதிராமல் சில அடிகள்
நடந்தோம் இருவருமே...

காற்றில் என் நைட்டியும்
அதன் இறகுகளும்
ஒருசேரவே அசைந்தது...

தலை சுழற்றி யாரும்
கவனிக்காத சுற்றத்தை
அனிச்சையாக இருவருமே
நோட்டமிட்டோம்...

சற்றும் யோசிக்காமல்
நொடி பொழுதில்
வானோக்கி பறந்தது அக்காகம்...
பறந்த சென்ற
அவ்விடத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன்
நான்தான்.!

● சரண்யா சத்தியநாராயணன்

## தப்பாத மாரி

பல்பொருள் அங்காடியிலிருந்த என்னை
சற்றே உரக்க அழைத்த அந்தக்குரல்
பூரணிக்காவுடையது...
திரும்பிப்பார்த்த எனக்கு
நிறைவில் நெஞ்சம் ததும்பியது...
அக்கா வளத்தின் பிடியில்
ஆளே மாறியிருந்தாள்...
அவள் எனக்கு மட்டுமில்லை
எல்லாருக்கும் இன்னொரு
அன்னபூரணியாயிருந்தவள்...
இடைப்பட்ட காலத்தில்
எதனாலோ எல்லாம் இழந்த நிலையில்
நான் சந்திக்க நேர்ந்தது...
அப்போதும் அக்கா எனக்கு
உணவிட்டே அனுப்பினாள்...
பழைய சாதத்தை இட்டபோதும் தெறித்த
அன்பின் வீச்சில் கலங்கிப் போயிருந்த
என்னை ஆதூரமாய்த் தலைதடவி
உண்ணவைத்தாள்...
அரசியைப்போலக் கோலோச்சியவள்
அப்போதும் அவளுடைய
அன்பின் கோல் உயரத்தானிருந்தது...
இன்று அவளை மீள
இப்படிப் பார்த்த ஆனந்தம்
என் சொற்களுக்குள் சிக்கவில்லை...
அப்படியே அணைத்துக்கொண்டேன்...
மனதின் சௌந்தர்யத்துடன்
மாளாத கருணையுடன் மாமாவுடன் நின்ற
பூரணிக்காவைப் பார்த்ததும் புரிந்தது...
அன்னபூரணிகள்
எப்போதேனும் சற்றே ஓய நேர்ந்தாலும்
அவர்கள் மீள ஒளிர்ந்து விடுவார்கள்...
நைந்த பழைய அன்னத்தையிட்ட போதும்...
இதோ மீள ஆயிரம் பேருக்கு அன்னமிடும்
நிலைக்கு வந்துவிட்ட போதும்
ததும்பாமல் நின்றொளிரும்
இந்த தேவதைகளால் தான்
மாரி பொய்ப்பதில்லை...



● ராணி கஸ்தூரி



## இப்போதெல்லாம் பேசப்பிடிக்கவில்லை

அலைபேசியில் அதிகமாய்
கதைகள் கேட்கிறேன்
சொற்பொழிவுகள் கேட்கிறேன்
பாடல் கேட்கும் பருவம் கடந்து
பேச்சு கேட்கிறேன்

அரசியல் பேசும்
அப்பாக்களும் தாத்தாக்களும்
தீர்ந்து போன பின்

நாட்டுநடப்பு பேசும்
அண்ணன்களும் மாமாக்களும்
தீர்ந்து போன பின்

வாழ்க்கை இப்படித்தான்
என அனுபவம் பகிரும்
சித்தப்பாக்களும் அத்தைகளும்
தீர்ந்து போன பின்

கடினமான தருணங்களை
தனித்திறமையோடு கையாளச்சொல்லித்தரும்
அக்காக்கள்
தீர்ந்து போன பின்

வா பார்த்துக்கொள்ளலாம்
இதெல்லாம் ஒரு விடயமா
எனத் தோளில் கைபோடும்
நட்புகள்
தீர்ந்து போன பின்

என் குழந்தைக்கு
கதை சொல்ல பாட்டியும்
கதை கேட்கிற குழந்தையும்
தீர்ந்து போன பின்

எனக்குப் பேச பிடிக்கவில்லை
அலைபேசியின்
காணொளிகளில்
கதைகள் கேட்கிறேன்
கேட்கிறேன்
கேட்கிறேன்...

● சாய் மீரா



விண்ணில்
விண்மீன்களுடன்
மேகத்தில் மறைந்து
கண்ணாமூச்சி
விளையாடிய நிலா
வழுக்கி விழுந்தது
சாலைக்குழியில்
தேங்கிய நீரில்...

தத்தளித்த நிலாவை
வலிக்காமல் எடுத்து
மொட்டை மாடியில்
இருந்த தண்ணீர்
தொட்டிக்குள்
பத்திரமாய் வைத்தேன்...

காலையில் எழுந்து
பார்த்தால் சொல்லாமல்
கொள்ளாமல்
கிளம்பி சென்றிருந்தது
அந்த திருட்டு நிலா...

அழும் தண்ணீர்
தொட்டிக்கு ஆறுதல்
சொல்ல என்னால்
இயலவில்லை

யாராவது பார்த்தால்
அழைத்து வாருங்களேன்
என் நிலாவை!

● ஆ.விஜயலெட்சுமி

சக்ராத்தில் இருப்பதாக
தெரியப்படுத்தி விட்டார்கள்...
கேள்விப்பட்டவர்கள்,
வந்து போகிறார்கள்...
ஆறுதல் சொல்கிறார்கள்...
அழுது போகிறார்கள்...
பால் ஊற்றுகிறார்கள்...
மக்காத் தண்ணி கொடுக்கிறார்கள்...
கலிமா சொல்லி காதில் ஊதுகிறார்கள்...
அதுனால கூட இப்படி இருக்கலாம் என்கிறார்கள்...
எதற்காகவோ காத்திருப்பதாக
எல்லோரும் நினைக்கிறார்கள்,
அப்படித் தான் நானும்...
*

சக்ராத் – மனிதனின் இறுதி நேரம்
கலிமா – இஸ்லாத்தின் அடிப்படை உறுதிப்பிரமாணம்

● சகா

## “டீ எஸ்டேட்” என்பது ஒரு கனமானச் சொல்



சொற்களை விதைத்தேன்
சொற்களை முளைக்கச் செய்தேன்
சொற்கள்தான் செடியானது
சொற்கள்தான் மரமானது
சொற்களே மலர்ந்தன
சொற்களே காய்த்தன
சொற்களின் கனிகள்
தித்திக்கத் தொடங்கினஞ்

என் சுற்றத்தார் எல்லோரும்
தேயிலைக் கூடையைத்
தூக்கிக்கொண்டு
மலைச்சரிவுகளில் இறங்குகையில்
நான் மட்டும்
வெறும் சொற்கூடையைத் தூக்கிக்கொண்டு
மலைச்சரிவுகளில் ஏறினேன்
காடு என்ற ஒற்றைச் சொல்லைதான்
அந்த கூடையில் பறித்துப் போட்டேன்
அந்த கூடை சொற்களால் நிரம்பிவிட்டதுஞ்.

பின்
கனமான சிலச் சொற்களைத் தவிர
எல்லாச் சொற்களுமே
இலையோடு இலையாக
தொழிற்சாலைக்கு போய்விட்டனஞ்
அப்படிதான்
உங்கள் தேநீர்க் கோப்பையில்
சொற்கள் வந்து சேர்ந்தன
ஒரு அந்தி மாலையில்
அதை நீங்கள் ஊதி ஊதிப் பருகினீர்கள்
அதை நீங்கள் பிரியமானவர்களிடம் பேசினீர்கள்

● திவ்யா ஈசன்

காட்டுத்தீயை அணைக்கும்
கனமழையாக
எரிமலை கால் நனைக்கும்
விரிகடலாக
புயலொன்று இளைப்பாறும்
மலைத்தொடராக
போர்க்கால இறுதியின்
பேரமைதியாக
ஏதொன்றாய் நீ எனக்கு

● ப.காளிமுத்து



## அதி மௌனம்

இலையுதிர்த்து நிற்கும் தரு
நீரற்ற தடமோடும் ஓடை
அறுவடை முடித்த நிலம்
பறவை விடுத்த கூடு
அலை தொட்டோடிய கரை
தின்று வீசிய பழக் கொட்டை
கருமேகம் தீர்த்த வானம்
கூடோடு நகர்விழந்த கம்பளிப்புழு
சிசு பருகி முடித்த கொங்கை
பரிதி நழுவிய கங்குல்
நிச்சயமாக இவையெல்லாம்
நிறைவின் தீரலில்
பேரோலமிடும் வெறுமைதான்
ஆனால்
நிரம்புவதற்கான வரமாக
விரிந்த வெறுமையை
நிறைத்துக் கொள்ளும்
பரிபூரணம் இவைகள்!!!

● இதயசகி



சித்திரைப் பிறப்புக் கொண்டாட்டத்தில்
மறந்து போகிறது
தாய் பங்குனி

அகண்ட காவிரி பார்த்த பிரமிப்பில்
மறந்து போகிறது
ஆடு தாண்டும் காவேரி

நிலா பார்ப்பதில்
மறந்து விடுகிறது
நட்சத்திரங்கள் எண்ணுவது

உணவகத்திற்கு பழக்கப்பட்ட நாக்கு
மறந்து போகிறது
வீட்டுச்சாப்பாடு

முத்தமிடும் நேரம்
மறந்து போகிறது
முன்னமிட்ட முத்தம்

பழைய முகங்கள்
மறந்து போகின்றன
புது முகங்களின் அறிமுகம்

இன்று பெய்த மழையில்
மறந்து போகிறது
அன்று பெய்த மழை

வாடகை வீட்டில் வசிப்பதில்
மறந்து போகிறது
வாழ்ந்த வீடு

● செந்தூர் குமார்



ஒரு இணுக்கு கறிவேப்பிலை
கூடுதலாய் கேட்டுப் பெறுவதில்
ஒரு கையளவு நிலக்கடலை
கூடுதலாய்ப் போடுகையில்
ரெண்டு தக்காளியை
எடைக்கு மேல் தருகையில்
ஒரு சாண் மல்லிச்சரம்
கூடுதலாய் நறுக்கித் தருகையில்
மகிழ்ந்தே பழகிய மனது
காலைப்பொழுதில்
எழுப்புகையில் செவிகொடாது
இறுக்கமாய் கண் பொத்தி
விடுபட்ட கனவைத் தேடிப்பிடித்து
கூடுதலாய் இரு நிமிடமாவது
கரம் கோர்த்து நடந்து
வழியனுப்பி வைத்தபின்
எழுவதே இதமாக்குது விடியலை...

● வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்

படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

**"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்" என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களைத் திரட்டிக்கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கியப் படைப்புக் குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறது.**




**புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**இலக்கிய படைப்பு குழுமம்**

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,

கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788

padaippu admin@padaippu.com www.padaippu.com